# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 09.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 4241/B/18</u>**

திரு.A.அருள்ராஜ் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (09.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.A.அருள்ராஜ் அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு சிவா. கார்த்திகேயன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், புவனகிரி வட்டாட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 13.03.2018 தேதியிட்ட மனுவில், மிராளூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 உட்பிரிவு, 7படி B Memo அறிக்கை நகலை வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 2017 ஜீலை மாதம் முதல் பிப்ரவரி 2018 வரை சமர்ப்பித்தார்களா என்றும், ஆம் எனில் மிராளூர் கிராம நிர்வாக அலுவலர்கள் சமர்ப்பித்த B Memo அறிக்கை நகல் வழங்குமாறு கேட்டும், மேலும் இது சம்பந்தமாகவே 7 இனங்களில் தகவல் கோரி புவனகிரி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 13.04.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை புவனகிரி

வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 11.06.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 03.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் நேரிடையாக வழங்க எடுத்து வந்திருப்பதாக தெரிவித்து, அதன் நகலை சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தியில்லை என்றும், மிராளூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 உட்பிரிவு, 7படி B Memo அறிக்கை நகலை வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 2017 ஜீலை மாதம் முதல் பிப்ரவரி 2018 வரை சமர்ப்பித்துள்ளார்களா என்றும், கிட்டதட்ட சுமார் 2 ½ கி.மீ தொலைவில் வாய்க்கால் புறம்போக்கு நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அந்த இடத்தில் தற்போது கொசுக்கள் தேங்கி இருப்பதால், அங்குள்ள மக்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகவும், பலதடவை பல்வேறு அதிகாரிகளுக்கு தொடர்ந்து மனுக்கள் செய்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்தும், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்று தருமாறு ஆணையத்திடம் கேட்டு கொண்டார்.

4. மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை என்பதை நன்கு உணர முடிகிறது. இருப்பினும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான விசாரணையை, சிதம்பரம் மாவட்டம், சார் ஆட்சியர் அவர்கள் தீர விசாரித்து 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

1. மனுதாரரின் 13.03.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, சிதம்பரம் மாவட்டம் சார் ஆட்சியர் அவர்கள், கடலூர் புவனகிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, கடலூர் புவனகிரி வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, சிதம்பரம் ADSP முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 20 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது. மனுதாரரின் 13.03.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலர் புவனகிரி வட்டாட்சியர் அலுவலகம் கொடுத்த 03.09.2019 தேதியிட்ட தகவலின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

2. வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். அன்றைய தின விசாரணைக்கு சிதம்பரம் மாவட்டம் சார் ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் மற்றும் கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4241/B/18</u>**

சார் ஆட்சியர்,
சார் ஆட்சியர் அலுவலகம்,
சிதம்பரம் (இணைப்புகளுடன்)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம்

திரு.A.அருள்ராஜ்,
எண்.519, விநாயகர் கோவில் தெரு,
வாண்டையாங்குப்பம்,
மஞ்சக்கொல்லை அஞ்சல்,
புவனகிரி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 608 601

Copy to: File / Stock File
SC/PA/12.09.2019